**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS.118/2023**

நாள்.23.10.2025

**வா.சா.2. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான், வாதியின் வேண்டுகோளின் பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்வதற்காக வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண ஆணையுறுதி ஆவணத்தை தயார் செய்தது வாதியின் வழக்கறிஞர் என்றால் சரிதான். வாதிக்கும், பிரதிவாதிக்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 1982–ல் நடைபெற்றது. வாதி, பிரதிவாதி இருவரும் திருமணத்திற்கு பின்பு தனியாக சென்றுவிட்டார்கள். எனக்கும், வாதிக்கும் ஒரு 30 வருடத்திற்கு முன்பு மனவருத்தம் ஆகி அவர், அவர் குடும்பத்துடன் வசித்து வந்தார். வாதி, என்மீது பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை வழக்கில் வாதிக்கு சொத்துக்களை பிரித்து கொடுத்து விட்டார்கள். எனக்கும், வாதிக்கும் அந்த வழக்கு தாக்கல் செய்ததால் மனவருத்தமாக இருந்தது. நானும், வாதியும் கடந்த 5 வருடத்திற்கு முன்பு தான் ஒன்றாக சேர்ந்தோம். பிரதிவாதி எந்த வருடம், யாரிடமிருந்து எவ்வளவு தொகை செலுத்தி இடம் வாங்கினார்கள் என்றால் ஞாபகமில்லை. வாதி அவருடைய சொந்த செலவில் இடம் வாங்கி வீடு கட்டினார் என்பது பொய்யானது என்றும், அவரது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் சொல்லியது போல் நான் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு அதில் நான் கையொப்பம் இட்டேன் என்றால் இல்லை.

மேற்படி கூடத்தில் என்ன பேசினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கும், வாதிக்கும் கடந்த 30 ஆண்டு காலமாக பேச்சுவார்த்தை இல்லாத நிலையில் வாதி இடம் வாங்கி வீடு கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி இடம் வாங்கியதோ, வீடு கட்டிய விவரமோ எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றும், வாதி எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :– இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.